<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண்.313/2006</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2020 ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 30.01.2020**

**பெயர் - சுஜாதா**

**க/பெ - சிவக்குமார்**

**வயது -**

**சாட்சி - PW1**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>**

வழக்கு சொத்தின் சர்வே எண் 147/1 மற்றும் 147/3. அதன் விஸ்தீரணம் 3.96 ஏக்கர். மேற்படி இரு புல எண்களின் பரப்பு அடுத்தடுத்து உள்ளது. இதற்கு இடையில் வாய்க்கால் உள்ளது. சர்வே எண் 147/1ல் தூர்ந்துபோன கிணறு உள்ளது. தற்போதும் அதே நிலையில் உள்ளது. மேற்படி நிலங்களுக்கு வடக்கே முதல் பிரதிவாதியின் நிலம் உள்ளது. அவரின் மனைவி தான் 2ம் பிரதிவாதி. முதல் பிரதிவாதிக்கு 2 மகன்கள் சுரேஷ் மற்றும் ரமேஷ். பிரதிவாதிகள் அனுப்பம்பட்டில் இருப்பது நன்கு தெரியும். நான் அனுப்பம்பட்டு வந்த காலத்தில் வழக்கு சொத்தை பிரதிவாதிகள் தான் பயிர் செய்து வந்தனர் என்றால் சரியல்ல. யாருமே பயிர் செய்யவில்லை. நான் பிறந்தது முதல் 150 சஞ்சீவிராயன் கோவில் தெரு, பழைய வண்ணாரபேட்டை, சென்னை 21ல் வசித்துவந்தேன். நான் என் பெற்றோருடன் கூட்டுக்குடும்பமாக வசித்துவந்தேன். 1979ல் என் தாயார் மீது உள்ள கிரையம் பற்றி என் தாயார் கூறி எனக்கு தெரியும். என் தந்தை வழி பாட்டியின் பெயர் வனரோஜம்மாள். என் தாயாருக்கு கிரையம் செய்த நாளிளேயே அதே தேதியில் வனரோஜம்மாள் என் தந்தை

பெயருக்கு தானசெட்டில் மென்ட் பத்திரம் ஏற்படுத்தினார். 1993ல் என் பாட்டி வனரோஜம்மாள் என் தாயார், தந்தை மற்றும் முதல் பிரதிவாதி மீது தாக்கல் செய்திருந்த வழக்கு பற்றி எனக்கு தெரியும். மேற்படி வழக்கில் தற்போதைய வழக்கின் சொத்து விவரமும் அடங்கும். அந்த வழக்கின் எண் 348/1993. மேற்படி வழக்கு இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கின் சங்கதிகள் எனக்கு தெரியாது. ஆனால் அந்த வழக்கு வாபாஸ் பெறப்பட்டது. என் பாட்டியார் அனுப்பம்பட்டில் வசித்துவந்தார். வனரோஜம்மாள் இறந்தபிறகு தான் அந்த வழக்கு வாபாஸ் பெறப்பட்டது என்றால் சரியல்ல. அவர் உயிருடன் இருந்தபோதே உடனடியாக வாபாஸ் பெறப்பட்டது. வனரோஜம்மாள் இறப்பு தெரியும் ஆனால் இறந்தபோது அவரது வயது தெரியாது. வனரோஜம்மாளை யார் பராமரித்து வந்தார் என்றால் என் தந்தை ஒருநாள் விட்டு ஒருநாள் வந்து நிலம் மற்றும் என் பாட்டியை பராமரித்து வந்தார். அப்போது என் பாட்டி என் தந்தையை முழுமையாக நம்பியிருந்தார். சொத்தை விற்பனைசெய்ய முடிவெடுத்திருந்தால் முதலில் என் தந்தையிடம்தான் கூறியிருப்பார் என்றால் சரிதான். அப்போது அவர்கள் பேசிய விவரம் எனக்கோ என் தாயாருக்கோ நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. அவ்வப்போது வந்து செல்வதால் என்தாயாருக்கு தெரியும். என் தாயார் வேலைக்கு செல்லவில்லை. இல்லத்தரசி அதனால் தனிப்பட்ட வருமானம் எதுவும் இல்லை. அதனால் என் தந்தையின் வருமானத்தை வைத்துதான் கிரையம் பெற்று இருக்கமுடியும் என்றால் சரியல்ல. என் தாயாரிடம் நகைகள் இருந்தன அவர்ரை அடமானம் வைத்தோ விற்பனை செய்தோ வாங்கியதாக பின்னால் தெரிவித்தார். நான் எனக்காகவும் மூன்றாம் வாதியான சகோதரிக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் அவர் தற்போது நீதிமன்றம் வந்துள்ளார். வனரோஜம்மாள் தாக்கல் செய்த வழக்கில் முதல் பிரதிவாதிக்கும் என் தாயாருக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்ப்பட்டதாக கூறியிருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. 1979ல் இருந்து அனுப்பம்பட்டு வரும்வரையில் நாங்கள் பயிர் செய்யவில்லை. 1990ல் இருந்து சில காலங்கள் முதல் பிரதிவாதி வழக்கு சொத்தில் பயிர் செய்து கிஸ்து செலுத்திவந்தார் என்றால் சரியல்ல. 2006வரை நாங்கள் செலுத்திவந்தோம். என் தாயார் பெயரில் எப்போது பட்டா மாறியது என்று எனக்கு தெரியாது. பழைய கிஸ்து ரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் பெயரில் முதலில் 197 அதன் பின் 223 என பட்டா உள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

என் தாயார் கிரையம் பெறுவதற்கு முன் என் பாட்டி வனரோஜம்மாள் பெயரில் பட்டா இருந்தது. வனரோஜம்மாளுக்கு முன் அன்னம்மாள் என்கிற விஜயலட்சுமி என்பவர் பெயரில் பட்டா இருந்தது. அவர் எனக்கு கொள்ளுபாட்டி என் அப்பாவின் பாட்டி. என் கொள்ளுபாட்டிக்கு ஒரே வாரீசு வனரோஜம்மாள் தான். என் தந்தையுடன் பிறந்தவர்கள் ராம்குமார், குமாரி, லட்சுமிபதி. வனரோஜம்மாள் பெரும்பாலும் லட்சுமிபதி அவரின் வீட்டில் தான் வசித்தார் என்றால் சரியல்ல. அனுப்பம்பட்டில் அவரது பூர்வீக வீட்டில் தனியாக இருந்தார். மேற்படி அந்த வீடு உள்ள தெரு முதலியார் தெரு. தற்போது நாங்கள் மேற்படி வீட்டில் வசிக்கவில்லை தனியா வீடுகட்டி வசித்துவருகிறோம். என் பாட்டி கண்குறைபாடு உடையவர்கள் என்றால் சரியல்ல. வயது மூப்பால் இருக்கலாம். அவர் காலத்திலேயே நிலத்தில் போர் போடப்பட்டது. சிலகாலம் தண்ணீர் இரைத்து பின்பு உபயோகம் அற்றதாக மாறியது. என் பாட்டியாருக்கு நிலத்தை விற்பனை செய்ய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. குமாரிக்கு திருமணத்திற்காக விற்பனை செய்யப்பட்டது. கிரையம் ஏற்படுத்தப்படும்போது வங்கிகடன் குறித்தோ திருமணமத்தேவை குறித்தோ எந்த விவரமும் குறிப்பிடவில்லை என்றால் இல்லை என்று நினைக்கிறேன். வழக்கு சொத்து என் பாட்டியின் பூர்வீக சொத்து. என் பாட்டியின் பூர்வீக சொத்து என்பதால் அவருக்கு முழு உரிமை இல்லை என்றால் சரியல்ல. என் பாட்டியின் மூப்பு மற்றும் உடல்நிலையை பயன்படுத்தி ஏமாற்றி கிரையம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் வனரோஜம்மாள் என் தந்தை, என் தாயார், முதல் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்யதார் என்றால் சரியல்ல. அந்த வழக்கு என் தந்தையின் சுழ்ச்சியி மற்றும் முயற்சியினால் 1994ல் வாபஸ் பெறப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு வாபஸ் பெறும்போது என் பாட்டி நீதிமன்றத்திற்கு ஆஜராகமலே வாபஸ் பெறப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. வாசா ஆ 10ல் வாதியின் வழக்கறிஞர் மேல் எழுத்து செய்ததன் பெயரில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என் பாட்டி சார்பாக இரு வழக்கறிஞர்கள் மாறியுள்ளனர். இந்த வழக்கு சொத்து குறித்து என் தாயார் மற்றும் முதல் பிரதிவாதிக்கு இடையே 1994ல் அவர்அவர் வழக்கறிஞர்கள் மூலம் அறிவிப்பு பரிமாற்றம் ஏற்ப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் வழக்கு சொத்தை கிரையம் பெறுவதற்கு தொடர்பு கொண்டனர் என்றால் சரிதான். அதற்கான முயற்சி மேற்கொள்ளவில்லை என்று வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். முதல் பிரதிவாதி மற்றும் 2ம்

பிரதிவாதி என் பெற்றோரை அனுகி சொத்திற்கான கிரைய தொகையை கொடுத்து சுவாதீனம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் பிரமான வாக்குமூலத்தில் 1994ல் சமரசம் ஏற்ப்பட்டு ஒரு தொகை பெற்றுக்கொண்டதாக கூறுவது சரிஎன்று கூறுவது தவறு என்று குறிப்பிட்டுள்ளோம். என் தாய் தந்தையர் கையொப்பம் எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் 27.01.1993 தேதியிட்ட வழக்கு சொத்து குறித்த கிரைய ஒப்பந்தத்தில் உள்ள தாயின் கையொப்பம் அவர்களின் கையொப்பம் போல்தான் உள்ளது. அது பிசா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது மேற்படி ஆவணத்தில் உள்ள 17.3.1994ல் உள்ள மேல் எழுத்தில் உள்ள என் தந்தையின் கையொப்பம் பிசா ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. என் தாயார் தாக்கல் செய்த வழக்குரையில் உள்ள கையொப்பம் என் தாயின் கையொப்பம். 27.1.1993ல் என் தாயாரின் கையொப்பமுன் வழக்குரையில் உள்ள என் தாயாரின் கையொப்பமும் வேறுவேறாக உள்ளது. மேற்படி இரு ஆவணங்களுக்கும் 11 ஆண்டுகள் இடைவெளி உள்ளது. அதனால் கையொப்பம் மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் இருப்பதுதான் அவரின் எப்பொழுதும் போடும் கையொப்பம். வழக்குரை தாக்கல ' செய்தபோது என் தாயார் அனுப்பம்பட்டில் இருந்தார். மறுக்கவேண்டும் என்ற காரணத்திற்காக பிசா ஆ 1 மற்றும் பிசா ஆ 2 ல் உள்ள கையொப்பம் வேறு வேறு என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல் மற்றும் 2ம் பிரதிவாதிகள் முழுகிரைய தொகையையும் செலுத்திய பின்தான் சுவாதீணத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. என் தாயார் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பில் அவர்களுடன் போடப்பட்ட ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டார் என்றால் சரியல்ல. என் தந்தையின் அண்ணன் லட்சுமிபதியின் சான்றிதழ் பெயர் கமலகண்ணன். அவரும் சஞ்சீவிராயன் தெரு, பழைய வண்ணாரபேட்டையில் இருந்தார் என்றால் சரியல்ல. என் தாயாரின் பூர்வீகம் மத்தராவேடு. என் தந்தைக்கு 1970க்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது. திருமணம் ஆகி என் தந்தை ஒன்றை ஆண்டுகள் கழிந்து வண்ணாரபேட்டை சென்றுவிட்டார். கூட்டு குடும்பத்தை விட்டு என் தந்தை சென்றவுடன் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆரம்பத்தில் இருந்து என் தந்தை குடும்பத்தோடு ஒத்துப்போகாததால் வனரோஜம்மாள் என் தந்தை பெயருக்கு ஆவணம் ஏற்படுத்த அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வேலை காரணமாக தான் என் தந்தை

வண்ணாரபேட்டை சென்றார். என் தாயார் வழக்கு தாக்கல் செய்தபின் அதற்கு பதில் உரை மற்றும் கூடுதல் பதில் உரை தாக்கல் செய்யப்பட்டு அதற்கு எதிர் உரையும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாசா ஆ 12 என் தாய் இறப்பிற்கு பின் வந்தது. வாசா ஆ 5 ல் 4 புல எண்களில் 5 ஏக்கர் நிலங்கள் என் பாட்டி பெயரில் காண்பிக்கப்பட்டுள்து. அதில் வழக்கு சொத்தின் சர்வே எண் 147/1 மட்டும் தான் காண்பிக்கப்பட்டுள்ளது. சர்வே எண் 147/ 3 இல்லை. வாசா ஆ 4ஆனாது 2006ல் முதன் முதலாக செலுத்தப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. அதில் 1411பசலி வரைக்குமான கிஸ்து செலுத்தியதாக உள்ளது. வாசா ஆ 3 ஆனாது 2006ல் வாங்கப்பட்டது. வாசா ஆ 2 ல் பக்கம் 2ல் சொத்து வனரோஜம்மாளுக்கு பாத்தியமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் என் தாயார் வாங்கிய கிரையம் குறித்து உள்ளது. 2ம் பிரதிவாதி 20.01.2020ல் இறந்துவிட்டார். ஒரே தேதியில் இரு கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்ட நிலையில் என் தந்தை பெயரில் உள்ள ஆவணத்தை தாக்கல் செய்தால் வாசா ஆ 1ன் உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்ய தயாராக உள்ளோம். தற்போதும் அந்த ஆவணம் எங்களிடம்தான் உள்ளது. 1994ல் இருந்தே பிரதிவாதிகள் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் என் பெற்றோர்களால் அமர்த்தப்பட்டு உரிய மறுபயன் பெறப்பட்டு கிரையம் கொடுத்துவிட்டதால் அவர்களுக்கு எதிராக என் தாயார் தாக்கல் செய்த இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.